

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | மார்ச் 11, 2021 | புரட்சி 20 | முழக்கம் 9 | விலை: ரூ.3.00


# தமிழ்நாட்டை கொள்கை எதிரிகள் துரோகிகளிடமிருந்து மீட்போம்!

# தி.மு.க. அணியை ஆதரிப்பீர்!

## தமிழ்நாட்டு மக்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் வேண்டுகோள்!

***எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டை கொள்கை எதிரி பா.ஜ.க.விடமிருந்தும் அதற்கு துணை நின்று துரோகம் இழைக்கும் அ.இ.அ.தி.மு.க.விடமிருந்தும் தமிழ்நாட்டை மீட்டெடுக்க தி.மு.க. அணியையே ஆதரிக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழக செயலவை முடிவு செய்துள்ளது.***

06.03.2021 சனிக்கிழமை, திருச்சி மாநகர் இரவி மினி அரங்கில் காலை 10 மணியளவில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடைபெற்ற திராவிடர் விடுதலைக் கழக செயலவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

- தமிழ்நாட்டில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் வழமையாக வந்து போகும் தேர்தலாக இல்லை!

  ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் - தமிழ்நாட்டின் திராவிட அடையாளத்தையும் அழித்து மதவெறி-மனுவாத மண்ணாக மாற்றுவதற்கு தனது சகல அதிகாரங்களையும் - சூழ்ச்சிகளையும் பயன்படுத்தி ஒன்றிய பாஜக அரசு படையெடுப்பையே நடத்தி வருகிறது.

  நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் தொடங்கி படிப்படியாக வளர்த்தெடுத்த சுயமரியாதை, சமூகநீதி, பகுத்தறிவுக் கொள்கைகளை அழிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன; தமிழ்நாட்டையும் வடமாநிலங்களைப் போல் ஆக்கிவிட்டால், இந்துத்துவம் என்ற மனுவாத மண்ணாக தமிழ்நாட்டை மாற்றிவிட முடியும் என்பதே அவர்களின் திட்டம்;




இந்த ஆபத்தான படையெடுப்புக்கு, ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளத் துடிக்கும் அ.இ.அ.தி.மு.க ஆட்சி தமிழினத்திற்கு துரோகம் இழைக்கும் வகையில் துணை நின்று வருகிறது. தங்கள் கட்சியின் தலைவர்களாக இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள மறைந்த எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா பின்பற்றிய மாநில உரிமைக் கொள்கைகளுக்குக் கூட இது மகத்தான துரோகம் ஆகும்.

இந்த ஆபத்திலிருந்த தமிழ்நாட்டையும் தமிழர்களையும் மீட்பதற்கு தற்போதைய சூழலில் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக திமுகவும் அதன் தலைமையிலான கூட்டணி கட்சிகள் மட்டுமே என்று, தேர்தல் அரசியலில் ஈடுபடாத, சமுதாய மாற்றத்திற்கு தன்னை அர்பணித்து வரும் திராவிடர் விடுதலைக் கழகம் உறுதியாகக் கருதுகிறது.

சூழ்ந்து நிற்கும் ஆபத்துகளிலிருந்து தமிழ்நாட்டை விடுவித்துக்கொள்ளவும் எதிர்காலத்தில் மதவெறி மனுவாத சக்திகளின் தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடவும், மக்களிடையே கருத்துருவாக்கம் செய்யவும், ஒரு பொது வெளி தேவைப்படுகிறது ! சமூக மாற்றத்துக்கான பெரியார் சிந்தனைகளை பேசுவதும், எழுதுவதும், பரப்புவதும் கூட தேசத் துரோகம் என்று மதவாத சக்திகள் மிரட்டி அதற்கு அஇஅதிமுக ஆட்சியைப் பணிய வைத்து வருகின்றன. கருத்துரிமை முற்றாக பறிக்கப்பட்டு வருகிறது. இந்த அடக்கு முறைகளைத் தகர்க்க

(4ஆம் பக்கம்)

## இப்ப, புரியுது 'ஜி'!

தமிழன் : நமஸ்தே ஜி; கழகங்கள் இல்லாத தமிழ்நாடு என்று ஒரு சுவர்கூட விடாமல் எழுதி வைச்சீங்க; இப்ப கழகத்திடம் 20 சீட்டுக்கு சரணடைஞ்சுட்டீங்களே!

ஜி : புரியாம பேசாதே; நாங்க அப்படி சொன்னது தமிழ்நாட்டுக்கே இல்ல; நாடாளுமன்றத்துக்கு; நீங்க ஏமாந்து போய் தவறாகப் புரிஞ்சுகிட்டீங்க. சரி; அப்படியே ஏமாந்து கிடக்கட்டும்னு நாங்களும் விட்டுட்டோம்; அவ்வளவுதான்.

தமிழன் : தமிழ்நாட்டில் அடுத்த முதலமைச்சர் யார் என்பதை நாங்க தான் தீர்மானிப்போம்னு சொன்னீங்களே, ஜி...?

ஜி : ஆமாம்; சொன்னோம். அவரு தான் எடப்பாடி பழனிச்சாமி; புரியுதுல்ல.

தமிழன் : இந்த முடிவை எடுத்தது அந்தக் கட்சிக்காரங்க தானே. நீங்க இல்லையே; அதுவும் கடும் உள்கட்சி யுத்தத்துக்குப் பிறகு தானே அந்த முடிவுக்கு அவங்களே வந்தாங்க.

ஜி : என்ன புரியாம பேசறீங்க. அந்த 'யுத்தத்தை' அக்கட்சிக்குள்ளே நடத்தியது யாரு? நாங்க தானே! ஓ.பி.எஸ்.சை மோத விட்டோம்; பிறகு நாங்க தான் அவரை விலக வச்சோம்; மீண்டும் சேர்த்து வச்சோம்!

தமிழன் : எடப்பாடி தான் முதல்வர் வேட்பாளர் என்று அறிவிச்ச பிறகும் இன்னும் நாங்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்று உங்க கட்சி முருகன் கூறினாரே, ஜி?

ஜி : அதற்கு அர்த்தம், கூட்டணி உடன்பாடு ஏற்பட்ட பிறகு ஏற்றுக் கொள்வோம்; அதற்கு முன்பு ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதுதான். எதையுமே புரிஞ்சுக்க மாட்டீங்களா?

தமிழன் : இப்ப தெளிவாய் புரிகிறது ஜி. இந்தியாவிலே தமிழ்நாட்டில்தான் அதிகமான ஊழல் நடக்குதுன்னு அமீத்ஷா பேசினாரே, இப்ப ஊழல் வழக்கில் முதல்வராக இருக்கும் போதே தண்டிக்கப்பட்ட ஜெயலலிதா கட்சியோட கூட்டணி வைச்சிருக்கீங்களே...

ஜி : அய்யோ... அய்யோ... (சிரிக்கிறார்) நாங்க ஊழலை எதிர்க்கிறோம்; உண்மைதான். ஆனால் ஊழல் செய்யும் கட்சிகளோடு கூட்டணி வைக்க மாட்டோம்னு எப்போதாவது சொல்லியிருக்கிறோமா? தமிழ்நாட்டு மக்களை இப்படித்தான் சிந்திக்க விடாம வச்சிருக்கீங்க...

தமிழன் : தெளிவான விளக்கம் தந்துட்டீங்க... கடைசியா ஒரே ஒரு சந்தேகம் ஜி...

ஜி : கேளுப்பா, நல்லா கேளு...

தமிழன் : நீங்க தான் அ.தி.மு.க.வை இரண்டா உடைச்சீங்க... பிறகு ஒன்றாக சேர்த்து வச்சீங்க... பிறகு ஓ.பி.எஸ். அணியை மீண்டும் உடைச்சு, உங்கள் கட்சியோடு கொண்டு போக திட்டமிட்டீங்க; இப்ப எல்லாத்தையும் அம்போன்னு விட்டுவிட்டு 20 சீட்டை வாங்கிக்கிட்டு சரணடைஞ்சுட்டீங்க; இது என்ன விளையாட்டு ஜி!

ஜி : இது தானப்பா எங்க தத்துவம். நாம் எல்லோரும் 'இந்து'க்கள்; ஒன்றுபட வேண்டும் என்று ஒற்றுமை பேசுவோம்; பிறகு இந்துக்களிலே ஒவ்வொரு ஜாதியாகப் பிரிச்சு அந்த ஜாதிகளின் பெருமைகளைப் பேசி, எங்க கட்சிக்குள்ளே இருப்போம்; இப்ப ஜாதி பேசி பிரிப்போம்; இந்து ஒற்றுமை பேச மாட்டோம்; ஆனால் இஸ்லாமியர்களை எதிர்க்க இந்து ஒற்றுமையைப் பேசுவோம்; ஓட்டு வாங்க பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை பேசுவோம்; மோடியையே பிற்படுத்தப்பட்டோர் என்போம்; ஆனால், 'பிராமண உயர்ஜாதி' ஏழைகளுக்கு 10 சதவீதம் ஒதுக்கிடுத் தந்து 'பிராமணர்'களோடு இணைவோம்; இங்கே பிற்படுத்தப்பட்டோரை ஒதுக்குவோம்; ஓட்டு கேட்கும்போது பிற்படுத்தப்பட்டோர் என்று பேசுவோம்; எங்களுக்கு தேவைப்பட்டால் பிரிப்போம்; பிறகு இணைப்போம்; சேர்ப்போம்; சேர்ப்பவர்களை பிரிப்போம்; பிறகு பிரிந்தவர்களை இணைப்போம்; அதுதான எங்கள் தத்துவமே! அதைத் தான் அரசியலுக்குள்ளும் செய்யுறோம்.

தமிழன் : இப்ப நல்லா புரியுது ஜி. தமிழன் ஏமாளியாக இருக்குற வரைக்கும் அவனது தொடையில் 'பூணூல்' (அதாவது கயிறு) திரிப்பீங்க என்பதும் சேர்த்துப் புரியுது! 'பாரத் மாதாக்கி' ஜே!

**– கோடங்குடி மாரிமுத்து**

தலையங்கம்

## வரவேற்றுப் பாராட்ட வேண்டிய தொலைநோக்கு திட்டங்கள்

தமிழக தேர்தல் களத்தில் ஒரு பண்பு மாற்றத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறார், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின். தமிழகம் எத்தனையோ தேர்தல் களங்களைச் சந்தித்திருக்கிறது. அ.இ.அ.தி.மு.க.வின் அரசியல் வருகைக்குப் பிறகு அக்கட்சியின் முதல்வர்களாக இருந்த எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் தேர்தல் களத்தை ‘கலைஞர் கருணாநிதி’ எதிர்ப்புக் களமாக மாற்றி அமைக்கும் பரப்புரை உத்திகளைத் தான் முதன்மையாகப் பின்பற்றி வந்தனர். வாதம் – எதிர் வாதம் – சவால் என்று மேடைகளை சூடேற்றுவதும், சில பல அறிவிப்புத் திட்டங்களோடு தேர்தல் அறிக்கை வெளியிடுவதும் நட்சத்திரத் தலைவர்கள் தமிழகத்தின் முக்கிய மய்யங்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து தேர்தல் பரப்புரை செய்வதுமான நடைமுறைகளோடு தேர்தல் களம் நிறைவடைந்துவிடும். இதற்கேற்ப தேர்தல் ஆணையமும் குறுகிய இடைவெளியில் தேர்தலை அறிவித்து பரப்புரைகளுக்கு கடும் கெடுபிடிகளை உருவாக்கிவிட்டது.

இவை எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கிறது, இந்த தேர்தல் களம். தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே தி.மு.க. மக்களை அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று பிரச்சினைகளை அறியக்கூடிய பரப்புரைத் திட்டங்களை செயல்படுத்தத் தொடங்கியது. மக்கள் கிராம சபை வழியாக மக்களை சந்தித்து அவர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் கண்டறியப்பட்டன. அடுத்தகட்டமாக தொகுதி வாரியாக மக்களைத் திரட்டி அவர்களின் பிரச்சினைகளை மனுக்களாகப் பெற்று அதை அடுத்து வரக்கூடிய தி.மு.க. ஆட்சி தனித் துறைகளை உருவாக்கி 100 நாட்களுக்குள் தீர்த்து வைக்கும் என்ற உறுதிமொழிகளை தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வழங்கினார்.

அடுத்த கட்டமாக திருச்சியில் கடந்த 2021, மார்ச் 7 ஆம் தேதி மாபெரும் சிறப்புப் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, அடுத்த 10 ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சிகளுக்கான தொலைநோக்கு திட்டங்களை துறைசார் நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து, மக்கள் முன் வைத்திருக்கிறார். பொருளாதாரம், விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வி, ஊரகக் கட்டமைப்பு, வேலை வாய்ப்பு, சமூக நீதி துறைகளில் நிர்ணயிக்கப்பட்ட தமிழ்நாட்டுக்கான வளர்ச்சி இலக்குகளை அவர் அறிவித்திருக்கிறார். திராவிட இயக்கத்தின் இலட்சியங்களான மாநில சுயாட்சி, இந்தி எதிர்ப்பு மற்றும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளே தமிழ்நாட்டுக்கான இலட்சிய அடையாளங்கள் என்ற அறிவிப்பின் வழியாக ஒற்றை இந்தியாவாக மாற்ற முயலும் பா.ஜ.க.வின் இந்துத்துவா கோட்பாடுகளுக்கு நேர்முரணானது ‘திராவிடம்’ என்பதை தி.மு.க. உறுதி செய்திருக்கிறது.

மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் இழிநிலைக்கு முடிவு கட்டுதல்; கல்வி மற்றும் சுகாதாரத்துக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து (ஜி.டி.பி.) செலவிடப்படும் தொகையை மூன்று மடங்காக உயர்த்துதல்; கற்றல் வெளிப்பாட்டுக்கான அளவீட்டில் (Index) முதல் 10 இடங்களுக்குள் தமிழ்நாட்டைக் கொண்டு வருதல் (தற்போது 17ஆவது இடம்); பள்ளிக் கல்வியை பாதியில் விட்டுவிடும் இடைநிற்றலை 4லிருந்து 5 விழுக்காடாகக் குறைத்தல்; பட்டியல் இனத்தினர், பிற்படுத்தப்பட்டோர் கல்வி உதவித் தொகையை இரு மடங்காக உயர்த்துதல்; ‘ரேஷன்’ அட்டைகளைப் பயன்படுத்தும் குடும்பத் தலைவி களுக்கு மாதம் ரூ.1000/- **உரிமைத்** தொகை வழங்குதல் போன்ற மிகச் சிறந்த செயல் திட்டங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. பெரியார் வழியில் சமூக நீதி கொள்கைகளைப் பின்பற்றும் உறுதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் திராவிட இயக்கத்தின் சாதனைகளால் தனித்துவமாக நிற்கும் தமிழகத்தை உருக்குலைக்கும் முயற்சிகளில் தீவிரமாக பார்ப்பனிய பா.ஜ.க.வும் அதற்கு பணிந்து நிற்கும் அ.இ.அ.தி.மு.க.வும் ஈடுபட்டு வரும் நிலையில் இந்திய வரைபடத்துக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டை வலிமையான கட்டமைப்புடன் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியிருக்கிறது.

‘நிர்வாகத் திறன் மற்றும் வளர்ச்சி’ என்ற எல்லைக்குள் மட்டும் இத்திட்டங்களை சுருக்கி விட முடியாது. நிர்வாகத் திறனும் வளர்ச்சியும் சமூகத்தில் எந்தப் பிரிவு மக்களை இலக்கு வைத்து செயல்படுகிறது என்ற கொள்கைப் பார்வையும் இதில் அடங்கியிருக்கிறது.

தேர்தல் அறிவிப்பு வந்த பிறகு பரபரப்பும் சூடும் தொற்றிக் கொள்ளும் தேர்தல் களங்களையே நாம் இதுவரை சந்தித்திருக்கிறோம். மாறாக ஆக்கபூர்வமான தொலைநோக்குத் திட்டங்களுக்கே முன்னுரிமை என்ற பார்வை – மிகச் சிறந்த வரவேற்கத்தக்க அரசியல் பண்பு மாற்றமாகும்.

‘தமிழ்நாடு’ – தமிழர்களின் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாகி உரிமைகளுக்குப் போராடத் தயாராகிவிட்டது என்ற நிலையை உருவாக்கி விட்டால் எதிர்ப்புகளை உறுதியாக எதிர்கொண்டு வெற்றி பெற முடியும்.

சமூக நீதிப் போராட்டமானாலும் மொழித் திணிப்புக்கும் இன அடையாள ஒழிப்புகளுக்கும் எதிரான போராட்டமானாலும் ஒன்றுபட்ட தமிழர்களின் சக்தி வெற்றி வாகை சூடியிருக்கிறது என்பதே தமிழ்நாட்டின் வரலாறு. அந்த வரலாற்றை மீட்டெடுக்கும் உள்ளடக்கமாக ஒளி வீசி நிற்கிறது, இந்தப் பிரகடனம்!

# கொள்கை எதிரிகளை நடுங்க வைக்கும் பெரியார் சிலைகள்

தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு, ஒரத்த நாடு, சீர்காழி, கிருஷ்ணகிரி அடுத்த கத்தாளமேடு பெரியார் சிலைகளை ‘சங்கி’கள் தொடர்ந்து அவமதித்து வருகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாகவே ‘சங்கி’களின் வேலைத் திட்டங்களில் ஒன்றாக பெரியார் சிலை ‘அவமதிப்பை’ வைத்திருக்கிறார்கள்.

இப்படி பெரியார் சிலைகளை அவமதிப்போரை ‘மனநலம்’ பாதித்தவர்கள் என்ற போர்வைக்குள் தமிழக அரசு காவல்துறை காப்பாற்றப் பார்க்கிறது. கொள்கை ரீதியாக அது சரிதான்; ஆனால் உடல்ரீதியாக அது உண்மையா? கிருஷ்ணகிரி அருகே உள்ள ‘சமத்துவபுரத்தில்’ பெரியார் சிலை மீது டயரைக் கொளுத்தி வீசியவர் குடிபோதையில் குளிர் காய டயரைக் கொளுத்தி வீசியபோது அது பெரியார் சிலை மீது விழுந்து விட்டது என்று கூறியிருக்கிறாராம்.

பெரியார் மட்டுமே ‘சங்கி’களை தூங்க விடாமல் துரத்திக் கொண்டே இருக்கிறார். பெரியாரின் கொள்கை வலிமை எத்தகையது என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

கிருஷ்ணகிரி அருகே உள்ள கத்தாளமேடு சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டவுடன் பொது மக்கள் வீதிக்கு வந்து போராடத் தொடங்கி விட்டார்கள். அவர்களில் சிலர் நெற்றியில் விபூதி குங்குமத்துடன் காட்சி அளித்தனர்.

கடவுள் மறுப்பாளரான பெரியாருக்காக - கடவுள், மத நம்பிக்கையுள்ள மக்களும் வீதிக்கு வந்து போராடுவதிலிருந்தே மக்கள் பெரியாரை எதற்காகக் கொண்டாடுகிறார்கள் என்பதை கொளகை எதிரிகள் புரிந்து கொள்ள முடியும். பெரியார் தமிழர்களிடையே பெரும்பான்மை சமூகமான ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராக மதிக்கப்படுகிறார். பெரியார் தான் தங்களின் மானத்துக்கும் உரிமைக்கும் போராடிய தலைவர் என்பதைப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

பெரியார் சிலை மீது நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலும் இந்த உணர்வுகளின் மீதும் புரிதலின் மீதும் நடத்தப்படும் தாக்குதல் என்பதை ‘சங்கி’கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் காலங்களில் இத்தகைய பெரியார் சிலை அவமதிப்புகள் வழியாக சங்கிகளின் அரசியல் வாரிசுகள் தங்கள் தோல்வியை மேலும் மேலும் உறுதிப்படுத்திக் கொண்டே வருகிறார்கள் என்பது மட்டும் உண்மை.


## இராசிபுரத்தில் கழகத் தலைவர் பங்கேற்ற திருமண வரவேற்பு



இராசிபுரத்தில், 25.2.2021 அன்று வி. பாலு (முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்) இல்லத் திருமண வரவேற்பு நிகழ்வு, இராசிபுரம் சேந்தமங்கலம் பிரிவு ரோடில் உள்ள கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு, மோகன்தாஸ், பி.ஈ., - ராதிகா, எம்.சி.ஏ., எம்.பில்., இணையர்களை வாழ்த்தி வாழ்த்துரை வழங்கினார். இணையர்களுக்கு நினைவுப் பரிசையும், கருஞ்சட்டைக் கலைஞர் நூல்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில், தனசேகரன் (தலைவர், சேலம் மாவட்ட கிக்பாக்ஸிங் அசோஷியேஷன்), சரவணன், வி. சுந்தரம் (அ.தி.மு.க.), நாமக்கல் மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள்), முத்துப்பாண்டி (மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள்), பிடல் சேகுவேரா (நகர செயலாளர் தி.வி.க), சுமதி மதிவதனி, அன்பரசன், பெரியண்ணன் (மல்லசமுத்திரம் ஒன்றிய பொறுப்பாளர்), ராமமூர்த்தி (வெண்ணந்தூர் ஒன்றிய பொருளாளர்) மற்றும் சஜீனா, திலகா, சிரஞ்சீவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சாதிப் பிரிவு காணப்படாத கடவுளோ அவதாரங்களோ உண்டா?



மனிதனுக்கு கடவுள் உணர்ச்சி தோன்றிய காலந்தொட்டே, இந்த நாட்டில் மேல்சாதி – கீழ்சாதி மோதல் உணர்ச்சி தோன்றிவிட்டது. கடவுள் பேராலேயே மேல்-கீழ் சாதி உணர்ச்சிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்து மதம் என்பதில் வைணவத்திலாவது, சைவத்திலாவது சாதிப் பிரிவு உயர்வு – தாழ்வு காணப்படாத கடவுள்களோ, அவதாரங்களோ, திருவிளையாடல்களோ கடவுளைக் காட்டிய பெரியோர்களோ, தத்துவப் புராணங்களோ, இதிகாசங்களோ ஏதாவது ஒன்றைக் காட்ட முடியுமா ? 64 நாயன்மார்களும் 64 சாதிக்காரர்களாய்ப் பிறந்திருக்கிறார்கள். 12 ஆழ்வார்களும் 12 சாதிக்காரர்களாயப் பிறந்திருக்கிறார்கள். இந்து மதத்திற்கு ஆதாரமான, சட்டமான மனுதர்ம சாஸ்திரம் முதலியவைகளை எடுத்துக் கொண்டால் அவைகளில் அளவில்லாத சாதிகளும், அதற்கு தாராதம்மியமும் காணப்படுவதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, எந்த நிலையில் எந்த ஆதாரத்தைக் கொண்டு – இன்று உங்கள் மத நம்பிக்கைகாரனும் அதைச் சேர்ந்த கடவுள் நம்பிக்கைகாரனும் அது சம்மந்தமான வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாச நம்பிக்கைகாரனும் உங்களிடம் வந்து சாதிப்பாகுபாடும் சாதி வித்தியாசமும் இல்லை என்று சொல்ல முடியுமா ?

குடி அரசு – 11.01.1931

‘பெரியாரும் – மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (4)

# ‘பார்ப்பன இந்தியா’வின் ஆபத்தை கடுமையாக எச்சரித்த சர்ச்சில்!

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி – தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் – பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி-மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

இங்கிலாந்தில் தொழில் கட்சி மாநாட்டில் பங்கேற்று அக்கட்சியையே விமர்சித்துப் பேசிய பெரியார், அங்கிருந்து பாரீஸ் போகிறார், பிரான்சு போனபோது தான், இங்கே இரட்டை வாக்குரிமை கேட்டு போராடிய அம்பேத்கருக்கு எதிராக காந்தி உண்ணாவிரதம் இருக்கிறார். அந்த செய்தி பாரீஸிலிருந்த பெரியாருக்குப் போகிறது, அங்கிருந்து தந்தி கொடுக்கிறார். இந்த நாட்டி லிருக்கிற ஏழுகோடி தாழ்த்தப்பட்ட மக்களைவிட, காந்தியினுடைய உயிர் பெரிதல்ல, உறுதியாக நில்லுங்கள், பின் வாங்காதீர், என்று தந்தி கொடுக்கிறார். செத்துப் போனால் செத்துப் போய்விட்டுப் போகிறார். ஏழு கோடி மக்களுக்கு நன்மை வருகிறது. ஆறு கோடி என்று சொல்கிறார். அதை விட்டுவிட்டு காந்தி உயிர் ஒன்றும் பெரியது இல்லை, இவர்களை விட; மக்கள் உரிமை தான் பெரிது, நீங்கள் உறுதியாக நில்லுங்கள், விட்டுக் கொடுக்காதீர், காந்தி பின்வாங்கினாலும் கை விட்டு விடாதீர்கள், என்று பாரீஸிலிருந்து தந்தி கொடுக்கிறார். அதற்கு பின்னால் அவர் இலங்கை வழியாக திரும்பி வருகிறார்., எல்லா கம்யூனிச நாடுகளிலும் அங்கிருக்கிற பொதுவுடைமை கட்சிகளை சந்தித்த பின்னால், பெரியாருடைய கருத்து என்னவாக இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

திரும்பி வருகிற வழியில், இலங்கையிலிருக்கிற சில அமைப்புகள் பெரியாருக்கு வரவேற்பு கொடுக்கின்றன. அங்கே இருக்கிற பொதுவுடமை சிங்கள இளைஞர்களெல்லாம் சேர்ந்து வரவேற்பு கொடுக்கிறார்கள். சிங்களர்கள் பொதுவுடமை கட்சியில் இருந்தனர். கொழும்பில் முதலில் வரவேற்பு. அதற்கப்புறம் தமிழ்ப் பகுதிகளுக்கெல்லாம் பெரியார் போகிறார். ஒரு வார காலம் அங்கிருந்து விட்டு தான், இந்தியா திரும்புகிறார்.

அப்பொழுது அங்கு பேசிய உரையில்தான் பெரியார் ஒன்றைச் சொல்கிறார். இங்கிலாந்தைப் பார்த்த பின்னால், ரஷியாவை பார்த்தப் பின்னால் அவருக்கு என்ன கருத்து வந்திருக்கிறது என்பதைச் சொல்லுகிறார். நமது நாடுகளில் ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், முதலாளி-தொழிலாளி, அரசன்-பிரஜைகள் இப்படியெல்லாம் வித்தியாசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமைகள் எத்தனை காலமாக இருந்து வருகிறது. இன்றா நேற்றா, இது அன்னிய அரசு ஆட்சியாலா, அல்லது சுய ஆட்சி இல்லாததாலா, தர்மதேவதை ஆட்சி, அவதார ஆட்சி, தெய்வாம்ச ஆட்சி இல்லாததாலா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே. அதற்கு அடிப்படையாகவும் அரணாகவும் இருந்து வரும் காரணங்கள் எவை என்பதை நீங்கள் சற்று நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தீர்களேயானால், இக்கொடுமைகளுக்கு முக்கிய காரணம் கடவுள், மதம், ஜாதீயம், தேசியம் (இந்திய தேசியத்தைச்சொல்கிறார்) என்பவையாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி, அதன் பயனாக பெரும் பான்மையான மனித சமூகத்தை மடமையாக்கி ஏய்த்து அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்கள் சுய நலமே பிரதானமாகக் கருதிக்கொண்டு சோம்பேறிகளாக இருந்துக்கொண்டு நம்மை ஆட்டி வைப்பது ஒரு காரணமே தவிர, வேறு காரணம் ஒன்றுமே கிடையாது. மீண்டும் மீண்டும் அவர் தன் கருத்தில் இருந்து மாறவில்லை. ஜாதீயமும் இங்கிருக்கிற மத கட்டமைப்பும், மக்களை போராட்ட உணர்விற்கு கொண்டு செல்லாமல் தடுக்கிற கருவிகளாக, இங்கிருக்கிற முதலாளிகள் பயன்படுத்துகிறார்கள். வேறு நாட்டில் வேறு மாதிரியாக இருக்கலாம், ஆனால் இங்கு அப்படித்தான் இருந்திருக்கிறது. பெரிதும் மேல் நிலையில் அவர்கள் இருந்து கொண்டும், சீரத்தில் சிறிதும் பாடுபடாமல் சோம்பேறி வாழ்க்கையில் இருந்து கொண்டும், அன்னியன் உழைப்பில் சுகம் அனுபவிக்கும் ஒரு சிறு கூட்டத்தாரும், பார்ப்பனர்களைச் சொல்லுகிறார், இப்படித் தான் அவையெல்லாமே காரணம், மேற்கண்ட உயர் நிலையை நிரந்தரமாக காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற கருத்தின் மீது செய்துக் கொண்டு இருக்கும் ஏற்பாடுகளான, கடவுள் மதம் தேசியம் தேசம் ஆகிவற்றின் சாதனங்களும், அவற்றிற்குள்ள கவசமும், காப்பும், அவை சம்பந்தமான பிரச்சாரங்களுமே ஆகும் என்று பெரியார் பேசினார். போய் வந்தாரே தவிர, தனியாகப் பொதுவுடமை என்பது வந்து விடாது, இவற்றின் மீது தாக்குதல் நடத்தி குறைந்தபட்சம் தளரச் செய்யாமல், தகர்ப்பது கூட முடியுதோ இல்லையோ, இவற்றை தளரவாவது செய்யாமல் நாம் அதை சாதிக்க முடியாது என்ற கருத்தைத் தான் பத்து மாத பயணமாக எல்லா பொதுவுடமை நாடுகளிலும் பார்த்துவந்த பின்னால், அந்த நாடுகள் வேறு, நம்முடையது வேறு. நான் சொன்னேன், 1931-ல் அவர் பேச்சு மொழி பெயர்த்துப் போட்ட அதே கருத்து தான், 1933-ம் ஆண்டிலும் அவருக்கு இருந்திருக்கிறது.



- ☐ **இரட்டை வாக்குரிமையை காந்தி மிரட்டலுக்காக விட்டுக் கொடுத்து விடாதீர் என்று பாரீஸ் பயணத்திலிருந்து அம்பேத்கருக்கு பெரியார் தந்தி கொடுத்தார்.**
- ☐ **ரஷ்யாவிலும் இங்கிலாந்திலும் புதிதாக நான் ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை என்றார், பெரியார்.**
- ☐ **இங்கிலாந்தில் பேசிய பிரிட்டிஷ் எதிர்கட்சித் தலைவர் சர்ச்சில், பார்ப்பனர் பிடியில் இந்தியாவை காந்தி ஒப்படைப்பது ஆபத்து என எச்சரித்தார்.**

சரி. ஒரு முறை ஈரோட்டில், உண்மை நாடுவோர் சங்கம் சார்பாக பெரியாரை அழைத்து பேச வைக்கிறார்கள், பயணத்தைப் பற்றி. நான் ரஷியாவிலும் இங்கிலாந்திலும் எல்லாம் போய் புதிதாக ஒன்றும் தெரிந்துக் கொள்ளவில்லை, நாம் இங்கு பேசிக் கொண்டிருப்பது சரியானது என்பதை மட்டும் தான் அங்கே போய் தெரிந்துக் கொண்டேன், புதிதாக ஒன்றும் தெரிந்துக் கொள்ளவில்லை, என்று அவர் பேசுகிறார்.

1931ஆம் ஆண்டு அவர் ரஷியா போவதற்கு முன்னாலேயே கோட்டாறு சுயமரியாதை சங்கத்தில் அவர் பேசுகிறார். இன்றைய தினம் பணக்காரனுடைய பணத்தை பிடுங்கி ஏழைகளுக்கு பங்கு போட்டு கொடுத்துவிட்டால், இந்த ஏழை நாளைக்கு என்ன செய்வான்? கயா சிரார்த்தமும் மதுரை வீரன் பூஜையும் காவடி அபிஷேகமும் செய்து வீட்டில் உட்கார்ந்துக் கொண்டே பணத்தைத் தொலைத்து விடுவான் என்பதுவும், பிறகு பழையபடி புரோகிதனும் தந்திரக்காரனும் ஏமாற்றுக்காரனும் தான் மறுபடியும் பணக்காரன் ஆகிவிடுவான் என்பதுவும் எனக்கு தெரியும். அது தான், அவர் அய்ரோப்பிய நாடுகளுக்கு போவதற்கு முன்னால் சொன்னது. அதற்கு பின்னால் 1944ஆம் ஆண்டு ஒரு செய்தியையும் ஒரு கட்டுரையும் தலையங்கத்தில் எழுதுகிறார். பொதுவுடமை இயக்கத்திற்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும். பொதுவுடமையா? பொது உரிமையா? என்கிற கட்டுரை எழுதப்படுகிறது. அதில் தான் பல்வேறு செய்திகள் பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ளன. பெரியார் என்ன சொல்கிறார் என்றால், மேல் நாட்டில் ஜாதி என்பது ஒன்று இல்லை. அங்கே அந்த பிரச்சனை கிடையாது. ஜாதி இல்லாததனால் வர்க்கம் மட்டுமே அங்கு இருக்கிறது. அது பிரச்சனை இல்லை. ஆனால் இங்கு என்ன நடக்கிறது என்பதை நீங்கள் பாருங்கள். என்ன என்ன இருக்கிறது என்பதை பாருங்கள். இந்திய பார்ப்பனர்கள் இந்நாட்டு பொதுவுடமைகாரர்களும் சேர்ந்திருக்கிறார்களே, அதன் அர்த்தம் என்ன என்கிற ஒரு கேள்வியைக் கேட்டார். இதற்கு இந்தியா மந்திரி சிரித்தாராம், என்று சொல்லி, இது இங்கிலாந்து பார்லிமெண்ட்டில் நடந்ததைச் சொல்கிறார். இந்த நேரத்தில் மற்றொரு கருத்தையும் கூறவேண்டும்.

1931இல் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், நிறைய அரசியல் மாற்றம் நடக்கிறது, அப்பொழுது தான் 2ஆவது வட்ட மேஜை மாநாடு நடக்கப் போகிறது, அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்த வின்செண்ட் சர்ச்சில் ஒரு கூட்டத்தில் இங்கிலாந்தில் பேசுகிறார். ஆல்பர்ட் ஹால் என்ற புகழ்பெற்ற ஹாலில் நடந்தது. Our Duty in India என்பது தான் அவருடைய பேச்சின் தலைப்பு. ஒரு வேளை இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து குடியேற்ற நாடு என்ற தகுதியை கொடுத்து விடுவார்கள். (அப்பொழுது கனடாவிற்கு அந்த அந்தஸ்தை கொடுப்பதாக முடிவு செய்யப் பட்டிருந்தது. கென்யா போன்ற நாடுகளுக்கு கூட). இந்தியாவிற்கும் கொடுக்கலாம் என்கிற பொழுது, அப்பொழுது அதை சர்ச்சில் எதிர்க்கிறார். அது தான் அந்த பேச்சினுடைய சாரம். அவர் என்ன சொல்கிறார் என்றால், காந்தியைப் பற்றி நீங்கள் (பிரிட்டிஷ் அரசு) சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை. காந்தி எதற்கு உழைக்கிறார் என்றால், பிரிட்டிஷ் என்கிற சொல்லில், இந்த B-க்கு பதிலாக, இன்னொரு B-யை உட்கார வைக்கப் பார்க்கிறார். British என்கிற இடத்தில் Brahmin-ஐ உட்கார வைப்பது தான் அவருடை விடுதலைப் போராட்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரே தவிர, to substitute the Brahmins in the place of British என்று சொல்கிறார். நீங்கள் குடியேற்ற நாட்டுத் தகுதியை இந்தியாவுக்குக் கொடுத்து விட்டால், சுய ஆட்சியைக் கொடுத்துவிட்டால், 60 மில்லியனாக இருக்கிற மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற பெயரால், இருக்கிறார்கள். அவர்கள் அழிக்கப்பட்டு போய்விடுவர், ஒரு பெரிய மக்கள் கூட்டமே அழிவை சந்திக்க நேரிடும், அவர்கள் கையில் ஆட்சியை நீங்கள் இப்பொழுது கொடுக்காமல், நிதானமாக கொடுக்கலாம். கனடாவிற்கு கொடுத்துவிடு அதைப் பற்றிய பிரச்சனை இல்லை, கென்யாவிற்கு கொடு, ஆனால் இந்தியாவிற்கு கொடுக்காதே என்பது தான் அந்த முழுப் பேச்சின் சாராம்சம்.

திரும்பத் திரும்ப பார்ப்பன ஆதிக்கம் என்பதை நீங்கள் குறைத்து மதிப்பிடாதீர்கள் என்கிறார். அந்தப் பேச்சில் தான் சொல்கிறார். காந்தியை அரை நிர்வாணப் பக்கிரி, இதில் ஏறி ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார். காந்தியை நம்பி கொடுத்து விடாதீர்கள். அங்கிருக்கிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆபத்தாகப் போய்விடும். இழந்து விட்ட ஆதிக்கத்தை பார்ப்பனர்கள் தங்கள் கையில் எடுத்துக் கொள்வார்கள். அது தான் சர்ச்சிலுடைய கருத்தாக இருக்கிறது. அந்த நேரத்தில் பெரியார் பேசிய பேச்சு, ஒரு ஆண்டுக்குப் பிறகு, இன்னொரு மொழியில், 1932இல் பேசுகிறார். ரஷியாவில் எப்படி ரஷியப் புரட்சி வந்தது என்றால், டால்ட்டாயிசம் என்கிற பிடுங்கலிசம் ஒன்று இருந்தது, நம்மூர் காந்தியிசத்தைப் போல, அது அழிந்த பின்னால் தான் அங்கே புரட்சி வந்தது. இங்கு எப்போது காந்தியிசம் ஒழியுமோ அப்பொழுது தான் இங்கே புரட்சியும் வரும் என்று இங்கே பெரியார் பேசுகிறார். இதையெல்லாம் சேர்த்துத்தான் நாம் பார்க்க வேண்டும்.

பெரியார் கருத்தையே சொல்வதை விட, இதை பொதுவுடமை சிந்தனையாளர்கள் என்னவாகப் பார்த்தார்கள்? மார்க்ஸ் என்ன பார்த்தார்? இப்பொழுது இந்தியாவில் இருக்கிற கம்யூனிஸ்ட்களுக்கு இந்தப் புரிதல் ஏன் இல்லை என்பதற்கு, அதற்கு முன்னாலே பல செய்திகளை உங்களிடம் சொல்லிவிட வேண்டும். இந்த கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த இந்திய நாட்டுத் தலைவர்களுக்கு ஜாதீய சிக்கலைப் பற்றித் தெரியாமல் இருக்கவில்லை. எம்.என்.ராய்-யைப் பற்றி நமக்குத் தெரியும். நாம் பல பேர் கேள்விப்பட்டிருப்போம், அந்தப் பெயரை. அவர் மெக்சிகோவில் போய் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுகிறார். மெக்சிகோ கட்சியுனுடைய பிரதிநிதியாகப் போய் மூன்றாம் அகிலத்தில் போய் கலந்துக் கொள்கிறார். அதற்கு பின்னால், இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி கட்டுவதற்கு அனுப்பி வைக்கப்படுகிறார். கருத்து வேறுபாட்டால் பின்னர் விலகிக் கொள்கிறார். அவர் பார்ப்பன ஆதிக்கத்தைத் தான் எதிர்க்கிறார்.

அப்பொழுது தான் 1933இல் (Fascism) பாசிசம் என்கிற ஒரு புத்தகத்தை எழுதினார். பாசிசத்திற்கும் பிராமணிசத்திற்கும் உள்ள உறவை நீங்கள் புரிந்துக் கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்பது தான் அந்த புத்தகதில் முக்கியமாக எழுதப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சிந்தனை உள்ளவர்களாக கம்யூனிஸ்ட்கள் பலர் இருந்தார்கள் என்பதற்கு, இரண்டு பேரினுடைய அறிக்கையை நான் உங்களிடம் சொல்லவேண்டும்.

(தொடரும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.03.2021**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகச் செயலவை; உரையாற்றிய தோழர்கள்



திருச்சி சத்திரம் பகுதியில் உள்ள 'ரவி மினி ஹால்' அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகச் செயலவை மார்ச் 6, 2021 அன்று காலை 10.30 மணியளவில் கூடியது. பெரியார் பிஞ்சுகளான வர்சினி, மற்றும் விசால் இருவரும் (திருவெறும்பூர் ஒன்றிய அமைப்பாளர் மணிகண்டன் மகள் மற்றும் மகன்) 'கடவுள் ஆத்மா' மறுப்பைக் கூறினர். திருச்சி மாவட்ட அமைப்பாளர் புதியவன் வரவேற்றுப் பேசினார். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தொடக்கவுரை யாற்றினார். தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் கழகத்துக்காக பெறப்பட்ட நன்கொடை கட்டிடத்துக்கு செலவிடப்பட்ட தொகை குறித்த வரவு செலவுகளை சமர்ப்பித்தார்.

தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். நிகழ்வில் கழக செயல் திட்டங்கள், தேர்தல் நிலைப்பாடு - கழக ஏட்டின் வளர்ச்சிக் குறித்து செயலவை உறுப் பினர்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். உரையாற்றியோர் விவரம்:

கோவிந்தராஜ் - சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்,முகில்ராசு - திருப்பூர் மாவட்ட கழக தலைவர், டேவிட் - சேலம் மாவட்ட செயலாளர், பெரம்பலூர் மாவட்ட தலைவர் தாமோதரன், திருவேங்கடம் பேராவூரணி, சந்தோஷ் , தருமபுரி மாவட்ட செயலாளர், நாத்திகஜோதி-ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர், செல்வராஜ் - ஈரோடு மாவட்ட செயலாளர், மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் - கோவை மாவட்ட தலைவர், மயிலாடுதுறை மகேஷ் - நாகை மாவட்ட செயலாளர், வாஞ்சிநாதன்- கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் , பெரியார் முத்து - சிவகங்கை மாவட்ட பொறுப்பாளர் , மணிகண்டன் மதுரை மாவட்ட செயலாளர், செந்தில், விருதுநகர் மாவட்ட பொறுப் பாளர், மருதமூர்த்தி - திண்டுக்கல் மாவட்ட செயலாளர், முத்துப்பாண்டி - நாமக்கல் மாவட்ட அமைப்பாளர், புதியவன் - திருச்சி மாவட்ட செயலாளர், நிர்மல் - கோவை மாநகர செயலாளர், பாரி - தஞ்சாவூர் மாவட்ட தலைவர், மதன் - சிதம்பரம் மாவட்ட செயலாளர், தெள்ளமிழ்து - செங்கல்பட்டு மாவட்ட செயலாளர், இரா.உமாபதி - சென்னை மாவட்ட செயலாளர், மதியழகன் - கல்லக்குறிச்சி மாவட்ட செயலாளர், டார்வின் - திருச்சி மாவட்ட பொறுப்பாளர், மகேந்திரன் - ஆத்தூர், டைகர் பாலன் - மேட்டூர், வேணுகோபால் - ஈரோடு மேற்கு மாவட்ட செயலாளர், மாளவிகா -மதுரை, கரூர் - சண்முகம், தமிழ்நாடு மாணவர் கழகம் - திருப்பூர் தேன்மொழி ஆகியோரைத் தொடர்ந்து தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், இளையராஜா, மேட்டூர் ஆர்.எஸ்.சக்தி, அன்புதனசேகர், சூலூர் பன்னீர் செல்வம், வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன், பொருளாளர் துரைசாமி, முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் ஆகியோரைத் தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழக தலைவர் கொளத்தூர் மணி ; மாவட்ட கழக பொறுப்பாளர்கள், தலைமைக்குழு உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கழகத்தின் தேர்தல் நிலைப்பாடு, வரும் காலங்களின் கழகம் எவ்வாறான பிரச்சாரங்களை மேற்கொள்வது போன்றவற்றை விளக்கி உரையாற்றினர். கழகத் தலை வர் கொளத்தூர் மணி செயலவைத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இறுதியாக, திருச்சி மாவட்ட செயலாளர் மனோகரன் நன்றி கூறினார். திருச்சி மாவட்டக் கழகம் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தது. காலை 10.30 மணிக்கு தொடங்கிய செயலவை மாலை 5 மணி வரை நடந்தது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியது தற்போதைய சூழலில் முதன்மையான பணி என்று திராவிடர் விடுதலைக் கழகம் கருதுகிறது.

இந்தப் பார்வையோடு பாஜகவையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் தோற்கடித்து திமுக தலைமையிலான கூட்டணிக்கு மகத்தான வெற்றியைக் குவிக்குமாறு தமிழ்நாட்டு மக்களை திராவிடர் விடுதலைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

- அண்மைக்காலமாக பெரியாரியலை நோக்கி இளைஞர்கள் ஏராளமாக வந்து கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல் பாடுகளை உன்னிப்பாக கவனித்து தாங்களாகவே பல இளைஞர்கள் இயக்கத் தில் ஆர்வத்துடன் இணைந்து செயலாற்ற வந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் பெரியாரியலை முழுமையாகப் புரிந்து உள்வாங்கிக் கொள்வதற்கும், பெரியார் இயக்கத்துக்கு எதிராக அதன் கொள்கை எதிரிகள் புதிது புதிதாக திசை திருப்பும் வாதங்களை முறியடிப்பதற்கும் கழகத் தோழர்கள் புதிய வெளிச்சத்தில் பெரியாரியலை அறியவும், புரிந்துகொள்ளவும், அவசியமும் தேவையும் உருவாகி இருக்கிறது.

இந்தப் பார்வையில் பெரியாரியல் மற்றும் சமூகவியல் பற்றிய பயிலரங்கம் மற்றும் வாசிப்பு இயக்கங்களை தொடர்ந்து நடத்தி - நம்மை செழுமைபடுத்திக் கொள்வோம் என்று இந்த செயலவை விழைகிறது.

# கழக செயலவையில் 'புரட்சிப் பெரியார் முழக்க' ஏட்டுக்கு வளர்ச்சி நிதி

திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் மாவட்டத் தலைவர் முகில் ராசு - ரூ.18,000/-

பெரம்பலூர் மாவட்டக் கழக சார்பில் மாவட்டத் தலைவர் தாமோதரன்-ரூ. 5,000/-

தருமபுரி மாவட்டக் கழக சார்பில் மாவட்டச் செயலாளர் சந்தோஷ் - ரூ. 5,000/-

கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன் வசூல் செய்தது - ரூ. 11,000/-

மயிலாடுதுறை மாவட்டக் கழக சார்பில் மாவட்டச் செயலாளர் மகேஷ் - ரூ. 10,000/-

நாமக்கல் மாவட்டக் கழக சார்பில் மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப் பாளர் முத்துப்பாண்டி - ரூ. 10,000

கிருஷ்ணகிரி மாவட்டக் கழக சார்பில் மாவட்டச் செயலாளர் குமார் - ரூ. 15,000/-

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக சார்பில் மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி- ரூ. 5,000/-

தஞ்சை மாவட்டக் கழக சார்பில் பேராவூரணி திருவேங்கடம் - ரூ. 5,000/-

- ஆகியோர் வளர்ச்சி நிதி மற்றும் சந்தாவை வழங்கினர்.

## 'புரட்சிப் பெரியார் முழக்க' ஏட்டுக்கு மாதம் ரூ.10,000 வழங்க முன் வந்தார் கோபி. இளங்கோ

கழக வெளியீட்டுப் பிரிவு செயலாளர் கோபி. இளங்கோ, கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க' ஏட்டுக்கு மாதந்தோறும் ரூ.10,000/- வழங்குவதாக கழக செயலவையில் பலத்த கை தட்டலுக் கிடையே அறிவித்தார்.

ஏற்கனவே திருச்செங்கோடு கழகத் தோழர் 'தம்பி தேனீர் விடுதி' உரிமையாளர் சோமசுந்தரம் மாதந்தோறும் ரூ.1000/ நன்கொடை வழங்கி வருகிறார்.

# ஏற்காட்டில் கழகத் தோழர் தேவப்பிரகாஷ்–நான்சி மணவிழா



சேலம் மாவட்டம், ஏற்காடு திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் தேவபிரகாஷ் -நான்சி ஆகியோரின் இணையேற்பு நிகழ்வு 14.02.2021 அன்று மாலை 3 மணியளவில் ஏற்காடு ரெட்ரீட் இல்லத் தில் நடைபெற்றது. நிகழ் விற்கு கழகத் தோழர் கார்த்திகேயன் வரவேற்பு கூறினார். சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்தி, மாவட்ட செயலாளர் டேவிட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக, மேட்டூர் வசந்தி குழுவினர் முற்போக்கு பாடல்களைப் பாடி நிகழ்வைத் தொடங்கினார்.

இணையர்களுக்கு உறுதி மொழி கூறி கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்தார். பின் இணையர்களை வாழ்த்தி உரையாற்றினார். தொடர்ந்து, அடிகளார் இராஜ் மரியசூசை, ஏற்காடு பெருமாள், தில்லைக்கரசி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மணமகன் தேவபிரகாஷ் நன்றி கூறினார். சுயமரியாதை திருமணத்தில் நன்செய் பதிப்பகம் 'தடை செய்யப்பட வேண்டிய புத்தகம்' எனும் தலைப்பில் வெளியிட்ட 'மனு சாஸ்திரம்' மற்றும் மரக்கன்றுகளும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 7373684049 newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th March 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN